00089

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விப்பீடம்
முன்பள்ளிக்கல்வி உயர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் 2017/2018
**ESC2315/EPA2815** – முன்பிள்ளைப்பருவ விருத்தி
இறுதிப்பரீட்சை - 2018
காலம் : 03 மணித்தியாலங்கள்

திகதி: 28.12.2018 நேரம்: மு.ப 09.30 – பி.ப 12.30

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி I

01. “உடற்பாகத்திலிருந்து கைகள் உட்பட மேற்பரப்பு வரையான” உடல் விருத்தி பற்றிய ஒரு கோட்பாட்டை விளக்குக.

02. “கற்றல்” என்றால் என்ன?

03. (i) பிறப்பிற்கு முன்னான விருத்தியைப் பாதிக்கும் காரணிகள் மூன்று (03) பெயரிடுக.

    (ii) பிறப்பிற்கு முன்னதான விருத்தியை, மேற்கூறிய காரணிகளில் நேர்மறையாகப் பாதிக்கும் ஒரு காரணி பற்றி விளக்குக.

04. உதாரணங்கள் தருவதன் மூலம் “இனங்காணல்” எனும் எண்ணக்கருவை விளக்குக.

05. இளம் பிள்ளைகளில் முதிர்ச்சியானது எவ்விதம் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துகின்றதென்பதை உதாரணங்கள் தந்து விளக்குக.

06. முன்பள்ளிப் பிள்ளைகளிடம் காணப்படக்கூடிய “சமூக நடத்தைக் கோலங்கள்” நான்கினைப் (04) பெயரிடுக.

07. (i) முன்பள்ளிப் பிள்ளைகளின் “மொழி உபாயங்கள்” நான்கினைப் (04) பெயரிடுக.

    (ii) மேற்கூறிய உபாயங்களில் ஒன்று பற்றி விளக்குக.

08. முன்பள்ளிப் பிள்ளைகளிடம் “மொழி விருத்தியை” பாதிக்கும் காரணிகள் ஐந்தை (05) விளக்குக.

(8×5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. (i) பிறப்பிற்கு முன்னான விருத்தியின்படி நிலைகள் மூன்றை (03) பெயரிடுக.
(03 புள்ளிகள்)

(ii) பிள்ளைகளின் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் பரம்பரையியல் காரணிகளைப் பெயரிட்டு விளக்குக.
(09 புள்ளிகள்)

(iii) "ஒரு பிள்ளையின் பிறப்பிற்குப் பின்னான விருத்திக்கு, பிறப்பிற்கு முன்னான விருத்தி அத்திவாரத்தை இடுகின்றது"
மேலுள்ள கூற்றை தர்க்க பூர்வமாக விளக்குக
(08 புள்ளிகள்)

10. (i) "முழு விருத்தி" எனும் எண்ணக்கருவை சுருக்கமாக விளக்குக
(10 புள்ளிகள்)

(ii) முன்பள்ளிப் பிள்ளைகளின் சுகநிலையான உடலியல் விருத்தியின் பொருட்டு ஒரு முன்பள்ளி ஆசிரியர் எவ்வாறு தலையீடு செய்யலாம் என்பதை உதாரணங்கள் சகிதம் விளக்குக.
(10 புள்ளிகள்)

11. "எல்லா பிள்ளைகளும் தனியாள் வேறுபாடுடையவர்கள்"

(i) ஒரே வயதுப் பிள்ளைகளின் உடல் அளவு வேறுபடுவதற்கான நிபந்தனைகள் **ஐந்து** (05) (காரணங்கள்) பெயரிடுக.
(05 புள்ளிகள்)

(ii) இரண்டு வகை உளவியக்கத் திறன்களைப் பெயரிடுக.
(01 புள்ளிகள்)

(iii) பிள்ளைகளில் உளவியக்கத்திறன்களின் விருத்தியின் பொருட்டும் முன்பள்ளி ஆசிரியரால் ஒழுங்குபடுத்தக்கூடிய செயற்பாடுகள் நான்கை (04) சுருக்கமாக விளக்குக.
(06 புள்ளிகள்)

(iv) பிள்ளைகளில் உளவியக்கத்திறன்களின் விருத்தியின்பொருட்டு முன்பள்ளி ஆசிரியரால் ஒழுங்குபடுத்தக்கூடிய செயற்பாடுகள் நான்கை (04) சுருக்கமாக விளக்குக.
(08 புள்ளிகள்)

12. (i) முன்பள்ளிப் பிள்ளைகளிடம் காணப்படக்கூடிய சமூகவிரோத நடத்தைக் கோலங்கள் ஐந்தை (05) பெயரிடுக.
(05 புள்ளிகள்)

(ii) மேற்கூறிய சமூக விரோத நடத்தைகளுக்குரிய பிள்ளைகளினால், ஏனைய பிள்ளைகளும் முன்பள்ளி ஆசிரியரும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை உதாரணங்களுடன் விளக்குக.
(07 புள்ளிகள்)

(iii) முன்பள்ளிப் பிள்ளைகளிடம் உள்ள இந்த சமூகவிரோத நடத்தைகளைக் குறைப்பதற்கு முன்பள்ளி செயற்பட வேண்டிய விதத்தை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

13. (i) பிள்ளைகளிடம் பொதுவாகக் காணப்படும் மனவெழுச்சிகள் **நான்கை (04)** பெயரிடுக.

(04 புள்ளிகள்)

(ii) முன்பள்ளி பிள்ளைகளிடம் காணப்படும் மனவெழுச்சிகளின் **மூன்று (03)** விசேட பண்புகளை சுருக்கமாக விளக்குக.

(09 புள்ளிகள்)

(iii) முன்பள்ளிப் பிள்ளைகளிடம் மனவெழுச்சி விருத்தி ஏற்படுத்துவதற்கு வழிகாட்டுவதில் முன்பள்ளி ஆசிரியரின் வகிபாகத்தை விளக்குக

(07 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*